செ.வெ.எண். 68

நாள் : 30.8.2017

<u>உன்னத உதகை</u>

நீலகிரி மாவட்டத்தில் இயற்கையை பேணி காக்க குப்பைகள் அற்ற புதுமை நகரமாக உருவாக்கும் வகையிலும், **"உன்னத உதகை"** என்ற திட்டம் ஏற்கனவே அமலில் உள்ள சில திட்டங்களை ஒருங்கிணைத்து சில மாறுதல்களுடன் மாவட்ட நிர்வாகத்தால் செயல்படுத்தப்பட உள்ளது. இதில் ஊரக பகுதிகளில் உள்ள 35 ஊராட்சிகளில் மொத்தம் ஒவ்வொரு ஊராட்சிகளிலும் ஒவ்வொரு பெரிய கிராமங்களுக்கும் ஒரு குப்பை பிரித்தல் கூடம் வீதம் 132 கூடங்கள் அமைக்கப்படும். இந்த குப்பை பிரித்தல் மையங்களுக்கு அருகில் உள்ள கிராமங்களிலிருந்து மக்காத குப்பைகள் மட்டும் கொண்டு வரப்படும். இந்த மையத்திற்குள் 6 தடுப்புகள் ஏற்படுத்தப்பட்டு இதில் கண்ணாடி பாட்டில்கள் தனியாகவும், பிளாஸ்டிக் பொருட்கள் தனியாகவும், ரப்பர் பொருட்கள் தனியாகவும், காட்போர்டு குப்பைகள் தனியாகவும், இதர குப்பைகள் தனியாகவும் பிரிக்கப்படும். இந்த குப்பை பிரிப்பு கூடம் தரை தளத்திலிருந்து ஒரு மீட்டர் வரை ஹாலோபிளாக் சுவராகவும், அதற்கு மேல் கம்பி வலை சுவர்களாகவும் அமைக்கப்படும். ஒவ்வொரு பெரிய கட்டிடத்திற்கும் அதனதன் ஏற்ற இறக்கங்களுக்கு தருந்தவாறு குடியிருப்புகளின் அருகிலேயே குழிகள் தோண்டப்பட்டு அதில் மக்கும் / வீட்டு உணவு கழிவுகள் கொட்டப்படும். இவற்றை வன விலங்குகளிடமிருந்து பாதுகாக்க உரிய இரும்பு தகடுகள் கொண்டு கதவுகள் அமைக்கப்படும். குழிகள் நிரம்பியவுடன் அருகில் இன்னொரு குழி எடுக்கப்பட்டு பயன்படுத்தப்படும். மக்கிய குப்பைகளை உரமாக பயன்படுத்தலலாம். மக்காத குப்பைகளை சேகரித்து ஒவ்வொரு கிராமங்களுக்கும் 2 குப்பை தொட்டிகள் வீதம் அமைக்கப்பட்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மற்றும் தூய்மை பாரதம் திட்டத்தின் மூலமும் பணி அமர்த்தப்பட்ட தூய்மை காவலர்கள் கிராமங்களில் ஒவ்வொரு வீடாக சென்று மக்காத குப்பைகளை சேகரித்து குப்பை பிரிக்கும் மையங்களுக்கு கொண்டு வருவர். இவர்களது நலனை பேணி காக்க கையுறைகள் மற்றும் ஜாக்கெட் வழங்கப்படும். குப்பை சேகரிக்க பைகளும் வழங்கப்படும். ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள அதன் பரப்பளவு மற்றும் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு குறைந்தபட்சம் 2 முதல் 7 வரை குப்பை பிரிப்பு மையங்கள் அமைக்கப்படும். இம்மையங்களிலிருந்து குப்பைகளை எடை போட்டு விலைக்கு எடுத்துக்கொள்ள உரிய நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படும். பிளாஸ்டிக் கழிவுகள் சிறு துகள்களாக மாற்றப்படும். இத்துகள்கள் சாலை பணிகளுக்கு பயன்படுத்தப்படும்.

நகராட்சிகளை பொறுத்தமட்டில் ஒவ்வொரு வார்டுகள் வாயிலாக இதை போன்று குப்பை பிரித்தல் பணி அறிமுகப்படுத்தப்படும். உணவு கழிவுகள் மற்றும் மக்கும் குப்பைகள் தனியே குழிகளில் மக்குவதற்காக சேகரிக்கப்படும். மக்காத திடக்கழிவுகளை மட்டும் பிரித்து உரிய முறையில் கழிவு செய்யப்படும்.

குப்பைகளை தனியாக பிரித்து கொடுக்காதவர்கள் மீதும், வெளியே வீசி சுற்று புறத்தை மாசுபடுத்துவோர் மீதும் கடுமையான நடவடிக்கை மேற்கொள்வதுடன் அபராதமும் விதிக்கப்படும்.

இத்திட்டத்திற்கு பொதுமக்கள், வியாபாரிகள் மற்றும் அனைத்து தரப்பு மக்களும் ஆதரவு நல்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட நிர்வாகம்,
நீலகிரி மாவட்டம்.

மாவட்ட ஆட்சியருக்காக
உதகமண்டலம்.